5. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு முன்னால், பேரவைக்கு ஓர் அறிவிப்பு.*

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்

2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு ஆகியவற்றிற்கான தேர்தல் அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத் தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் புதன் கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

வேட்புத் தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் புதன் கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் வெள்ளிக்கிழமை குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும்.

2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு

(ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம்

(உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*